# மோதல்களால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசர செயற்திட்டம் (சீஏஆர்ஈ) – ஆக்கக்கூறு ஏ - 2012

---

## 1. அபிப்பிரயாம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மீளாய்வாண்டின் போதான கட்டுநிதிய கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீளளிப்புக்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்றும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளன என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கேற்ப மீளளிப்பு விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ), மீது நியாயமான முறையில் நம்பிக்கை கொள்ளலாம் என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

தரப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 2,524,886,115 தொகையானதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 3,405,,873,104 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 2,291,866,077 | 512,276,155 | 2,974,027,072 |
| உபகரணங்கள் | 19,982,886 | 34,601,979 | 55,555,219 |
| ஆலோசனை | 151,476,107 | 106,966,105 | 261,124,897 |
| உயரும் தொழிற்பாட்டுக் கிரயம் | 37,655,435 | 34,144,376 | 74,833,794 |
| கடப்பாட்டுக் கட்டணங்கள் | 23,905,610 | 16,426,512 | 40,332,122 |
| | 2,524,886,115 | 704,415,127 | 3,405,873,104 |

### 2.2 கட்டு நிதி நிதியக் கணக்கு

தரப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் படி, மீளாய்வாண்டில் கட்டு நிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிலிருந்த மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ. டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 2,019,699 | 230,046,320 |
| கூட்டு : மீள் நிரம்பல்கள் | 4,262,042 | 557,843,952 |
| வேளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 11,426,422 |
| | 6,281,741 | 799,316,694 |
| கழி : பற்றுதல்கள் | 3,419,901 | 435,402,785 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 2,861,840 | 363,913,909 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் காட்டப்பட்ட கிடைக்க வேண்டியவைகளிற்கும் வடமாகாண செயற்திட்ட அலுவலகத்தால் தரப்பட்ட 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட கிடைக்க வேண்டியவைகளிற்கிடையில் ரூபா 539,299 கூட்டுமொத்த வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வடமாகாண சபையால் (என்பீசீ) பேணப்பட்ட நிதிக் கூற்றுக்களிற்கும் செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களிற்குமிடையில் ரூபா 98,664,486 கூட்டுமொத்த வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

**பெறுகை மற்றும் கொடுப்பனவுக் கூற்றுக்கள்**

| வட மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் | வித்தியாசம் |
|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா |

| | | | |
|---|---|---|---|
| சிவில் | | | |
| வேலைகள் | 1,395,361,651 | 1,297,667,519 | 97,694,132 |
| உபகரணங்கள் | 20,953,240 | 19,982,886 | 970,354 |
| | 1,416,314,891 | 1,317,650,405 | 98,664,486 |

## 3.2 திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு

(அ) முழு செயற்திட்டக் காலத்தையும் உள்ளடக்கி மாதாந்த, காலாண்டு மற்றும் அரை ஆண்டு ரீதியான பொறுப்புக்களை நிர்ணயித்து நிதி மற்றும் பௌதீக ரீதியான இலக்குகளுடன் சகல செயற்திட்ட நடவடிக்கைகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக ஒரு முழுமையான நடவடிக்கை திட்டம், செயற்திட்ட காலத்திற்கிடையில் ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் செயற்திட்ட குறிக்கோள்களை அடைவதை உறுதிப்படுத்துவதாகத் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அடையப்பட வேண்டிய இலக்குகளுடன் பிரதான பதவியனியினரின் பொறுப்புக்கள் மற்றும் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான பாதீட்டு ஒதுக்கீடுகள் என்பவற்றைக் தெளிவாக இணங்காணக்கூடிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய செயற்திட்டத்தின் முழுமையான முன்னேற்றத்தைக் சரியான படிமுறைகளை எடுப்பதற்கும் அமைக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கும் அவசிய மாற்றங்களை மேற்கொள்ளுவதற்குமான நோக்கில் முறையாக மதிப்பாய்வு செய்யமுடியவில்லை.

## 3.3 ஒருங்கினைப்பு பதவியினருக்கு செலுத்தப்பட்ட படிகள்

(அ) வட மாகாண சபையின் பிரதம செயலாளர், உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் திட்டமிடல் என்போருக்கு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்கான ஒருங்கிணைப்புப் படியாக ரூபா 1,063,016 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) உத்தியோகத்தர்களின் சம்பளத்தின் 1/5 ஐ மேற்கொள்வதற்கு வட மாகாண ஆளுநரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் படிகள் கொடுப்பனவு செய்த நிதிகள் மாகாண சபையின் அதிகார வரம்பிற்குள் வரவில்லை ஆனால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகார வரம்பிற்குள் கீழானதாகும். எனவே, ரூபா 1,063,016 படி சம்பந்தமான அங்கீகாரம் மாகாண சபைகள் அமைச்சிடமிருந்தோ அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தோ பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்ட வேலைகளை ஒருங்கிணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒருங்கினைந்த குழுக் கூட்டங்களிற்கு வருகை தந்தமை தவிர அவற்றின் தன்மை, செய்யப்பட்ட வேலையின் விபரங்கள் செயற்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளிற்காக அந்த அலுவலர்களால் செலவிடப்பட்ட நாட்களின் எண்ணிக்கை போன்ற வேலை ஒருங்கினைப்பிற்கான சான்றுகள் கணக்காய்விற்காகத் தரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் VX ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒரு மாதத்திற்கு மொத்தச் சம்பளத்தில் ரூபா 50,000 மேற்பட்ட ஒருங்கிணைப்புப்படி செலுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து உ.பா.செ.வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சிவில் வேலைகள்

ஐந்து மாவட்டங்களிலுள்ள வீதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) கொக்காவில் - துணுக்காயின் 10 கி.மீ வீதி

5 கி.மீ வீதி வேலைகள் மாத்திரம் விளிம்புகள் நிரப்பப்படாமல் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மற்ற 5 கி.மீ வீதியின் பிரயாணம் செய்யத்தக்க நிலையிலான வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

### (ஆ) முறிகண்டி – அக்கராயன் குளம் வீதி (10 கி.மீ)

விளிம்புகள் நிரப்புதல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) பெருங்குளம் - சங்கத்தானை வீதி**

விளிம்புகள் இறுக்கப்படுதல் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) மீனாட்சி அம்மன் கோவில் வீதி**

விளிம்புகள் இறுக்கப்படுதல் முறையாக செய்யப்பட்டிருக்கவில்லை.

**(உ) சாவச்சேரி நகர சபை வீதி**

விளிம்புகள் இறுக்கப்படுதல் திருப்திகரமாக செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.5 முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை

காலாண்டு மற்றும் அரையாண்டு முன்னேற்ற அறிக்கைகள் ஆலோசனைக் கம்பனியால் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீவடங்களிலுமான ஒட்டு மொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்ற அறிக்கை கோரப்பட்ட போதிலும் தயாரிக்கப்பட்டு,கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 நிதிகளின் பயன்பாடு

சேயற்திட்ட பிரேரனைகளின் படி, செயற்திட்டங்களிற்கான ஆறு வகைகளின் கீழ் ரூபா 9,924.2 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2012 திசெம்பர் 31 வரை ரூபா 3,406 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் செயற்திட்ட காலத்தின் 30 மாதங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் 66.6% நிதிகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. 2012 திசெம்பர் 31 வரையான ஒவ்வொரு வகையின் கீழும் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத ஒதுக்கீடுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வகை | கடன் உடன்படிக்கைகளின் படி நிதி ஒதுக்கீடு | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய தொகை | 2012 திசெம்பர் 31 வரையான பயன்படுத்தாத தொகை | பயன்படுத்திய தொகைகளின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா – மில்லி | ரூபா – மில்லி | ரூபா – மில்லி | % |
| சிவில் வேலைகள் | 8,933.6 | 2,974.0 | 5,959.6 | 33 |
| உபகரணங்கள் | 65.0 | 55.6 | 9.40 | 86 |
| ஆலோசனை | 261.3 | 261.0 | 0.3 | 99 |
| உயரும் கிரயம் | 128.7 | 74.8 | 53.9 | 58 |
| கட்டுப்பாட்டுக் கட்டணங்கள் | - | 40.4 | (40.4) | - |
| ஒதுக்கப்படாதவை | 535.6 | - | 535.6 | - |
| | 9,924.2 | 3,405.8 | 6,518.4 | 34 |

## 4.2 நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

தரப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்ட ஆக்கக் கூறு ‘‘ஏ’’ இன் கீழான நடவடிக்கைகளின் நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

| | ஒப்பந்த இல | ஆரம்பித்த திகதி | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | 2012.12.31 இல் உள்ளவாறான நிதி முன்னேற்றம் % | 2012.12.31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| (i) | சீஏஆர்ஈபீ/என்பிஆர்டிடி/என்சீபீ/எல்ஜீ 9 | 2012.11.01 | 2014.02.01 | 8.94 | 5 |
| (ii) | சீஏஆர்ஈபீ/என்பிஆர்டிடி/என்சீபீ/பீஎல் 4 | 2011.08.25 | 2013.01.25 | 32.79 | 30 |
| (iii) | சீஏஆர்ஈபீ/என்பிஆர்டிடி/என்சீபீ/பீஎல் 6 | 2011.08.25 | 2013.01.25 | 27.49 | 13 |
| (iv) | சீஏஆர்ஈபீ/என்பிஆர்டிடி/என்சீபீ/பீஎல் 7 | 2011.09.30 | 2013.03.02 | 71.83 | 69 |
| (v) | சீஏஆர்ஈபீ/என்பிஆர்டிடி/என்சீபீ/பீஎஸ் 2 | 2011.08.18 | 2012.05.18 | 39.80 | 35 |
| (vi) | சீஏஆர்ஈபீ/என்பிஆர்டிடி/என்சீபீ/பீஎஸ் 3 | 2011.09.27 | 2012.09.27 | 64.00 | 56 |
| (vii) | சீஏஆர்ஈபீ/என்பிஆர்டிடி/என்சீபீ/பீஎஸ் 9 | 2011.10.20 | 2012.10.19 | 54.40 | 50 |
| (viii) | சீஏஆர்ஈபீ/என்பிஆர்டிடி/என்சீபீ/பீஎஸ் 10 | 2011.10.24 | 2012.10.23 | 39.00 | 30 |

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஒப்பந்த நிருவாகம்

(இ) கொடுப்பனவுகள்